# தமிழைக் காக்க ஒரு பொங்கல்





வாசலில் குழி தோண்டி, மண்பானை பொங்கலிட்டு, உழவுக்கு வந்தனை செய்த தமிழ்நாட்டு தமிழர்கள், கேஸ் ஸ்டவ் பொங்கலுக்கு மாறி விட்ட காலம் இது. முதல் நாளே மாடுகளைக் குளிப்பாட்டி, ஊர் திடலில் கட்டி, கூடி பொங்கலிட்டு ஆயாங்கலைச்சோறு சாப்பிட்டதெல்லாம் மெல்லக் கனவாய் பழங்கதையாய் மாறி விட்டன்.

இப்போது தமிழர்களின் பெரும்பாலான கொண்டாட்டங்கள் டாஸ்மாக்கில் விடிந்து, அங்கேயே முடிந்தும் போகின்றன. ஆனால் இயற்கை இடர்பாடு, பிழைப்பு, போர் என துயரங்களுக்கு மத்தியில் தூர தேசங்களுக்கு இடம்பெயர்ந்து செல்லும் தமிழர்கள், அந்த வாழ்க்கைச் சூழலிலும் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்களை கோலாகலமாகக் கொண்டாடத் தவறுவதில்லை.

பிரான்ஸ் நாட்டில் கடந்த ஆண்டு முதல் தமிழர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு இது இருநாள் நிகழ்வுகளாகக் கொண்டாடப்பட்டது. ஜனவரி 19 சனிக்கிழமை ஆய்வரங்குடன் தொடங்கிய நிகழ்ச்சி, இரண்டாம் நாள் கலை நிகழ்ச்சிகளோடு வண்ணமயமாக நிறைவு பெற்றது.

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் பாலசுகுமார் தலைமையில், பிரான்ஸ் நாடாளுமன்ற உறுப்பினர் பிரான்சுவா பொப்புனி, யுனெஸ்கோ இயக்குநர் ஆறுமுகம் பரசுராம், மொரீஷியஸ் பிரதிநிதி பொன்னுசாமி கிருஷ்ணசாமி கவிஞர் கி.ப. அரவிந்தன் உள்ளிட்ட ஏராளமான பிரமுகர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். தொடக்கத்தில் தமிழ்ச் சோலை மாணவிகள் நிகழ்த்திய வரவேற்பு நடனம் கொண்டாட்டத்தை இரட்டிப்பாக்கி






யது. பிரமாண்டமான மண்டபத்தில் பொங்கல் அரங்கம், கலைவிழா அரங்கம், கோல அரங்கம் என தனித்தனியாக அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன.

புதுவை பல்கலைக்கழக பிரெஞ்சுத் துறை தலைவர் பன்னீர்செல்வம், மலேசிய தமிழாசிரியர் திருமாவளவன் ஆகியோர் தமிழ் மழலைகளுக்கு 'அகரம் கற்பிக்கும் விழா'வில் பங்கேற்று, பட்டுடையில் ஜொலித்த குழந்தைகளுக்கு தமிழ் எழுத்து பயிற்றுவித்தனர். இந்நிகழ்வில், 27 கரீபியன் குழந்தைகளும் பங்கேற்று அகரம் எழுதப் பழகியது ஹைலைட்.

பட்டுச்சேலை, தாவணி என தமிழ் தழைக்க தழைக்க கோலமிட்ட இல்லத்தரசிகளுக்கு மத்தியில் ஜீன்ஸ் – டி ஷர்ட் அணிந்த நவநாகரிக மங்கைகளும் குனிந்து நிமிர்ந்து கோலமிட்டது ரசிக்க வைத்தது.

குருத்தோலை மணக்க, மஞ்சளும் குங்குமமும் இடப்பட்ட பானைகளில் கற்களை தற்காலிக அடுப்புகளாக்கி, பொங்கலிட, புகையாக சூழ்ந்தது 'பொங்கலோ பொங்கல்' கோஷம்.

சாம்பிரதீபனின் விபரணக் கூத்து, பாரதி பாடலுக்கு நடனம், ஜெர்மன் தமிழர்களின் பொய்க்கால் குதிரை ஆட்டம் என களைகட்டியது கொண்டாட்டம். ரவீந்திரன் குழுவினரின் மயிர்கூச்செரிய வைத்த 'களரியாட்டம்' வெளிநாட்டு விருந்தினர்களின் விழிகளை விரிய வைத்தது.

இறுதியில், 'கரீபியன் தீவில் தமிழ்' என்னும் தலைப்பிலான ஒரு பாடலை அத்தீவுகளைச் சேர்ந்த தமிழர்கள் மேடையில் பாடினர். அந்தப் பாடலில் எல்லா தமிழ் வார்த்தைகளும் கரீபிய மொழிக்குள் காணாமல் போயிருந்தன. இந்த கொச்சைத் தமிழ்ப்பாட்டு, பொங்கல் கொண்டாட்டத்தில் பலத்த சலசலப்பையும், கவலையையும் உண்டாக்கியது.

இலங்கை, புதுவை, தமிழகம், மலேசியா, மொரீஷியஸ், கரீபியன் தீவுகள் என உலகத் தமிழர்கள் குழுமிய இந்த தமிழர் திருநாள் நிகழ்ச்சியின் விடைபெறலின்போது எல்லோரிடமும் சிறிய சோகமாக 'கரீபியன் தமிழ்ப் பாடல்' தொக்கி நின்றது.

**– வெ.நீலகண்டன்**